பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 01 வியாழக்கிழமை 13.02.2025 | அதிர்வு 197

## பல தரப்பினரும் கலந்துகொண்டு சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதிக்கு இறுதி அஞ்சலி



03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசுக் கட்சியின் வழக்கு 4 மாதங்கள் தள்ளிவைப்பு!

## விசாரணைக்கு வர மேலும் காலதாமதமாகும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு அதன் எதிராளி ஒருவரை ஆள்மாற்றம் செய்ய இடமளிப்பதா என்பது குறித்து ஆராய்வதற்காக வரும் ஜூன் மாதம் நான்காம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் எதிராளி ஒருவரை மாற்றுவது குறித்துத் தீர்மானிக்கப்படும். அதன் பின்னரே வழக்கின் விசாரணை பற்றி ஆராயப்படும்.

இன்று இந்த வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே வழக்கு இவ்வாறு தள்ளி வைக்கப்பட்டது.

வழக்கை இணக்கமாக முடிவுறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காகவே இன்று வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

02

## அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 29 ஆம் திகதி விசாரணை

“புதிய சுதந்திரன்“ இணையப் பத்திரிகையின் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதி முன்னெடுப்பதற்குத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று முடிவு செய்தது.

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கு இன்று நீதிபதி பயஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது



இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தொடர்பில் அகிலன் முத்துக்குமாரசாமி அந்தப் பத்திரிகையில் வரைந்த செய்திக் கட்டுரை நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாகும் என வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் குற்றம் சுமத்தி உள்ள நிலையில், அந்த விடயம் குறித்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் இன்று திகதி நிர்ணயம் செய்தது.

02

# நாடு திரும்பினார் அநுர



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 2025 உலக அரச மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி இன்று முற்பகல் நாடு திரும்பினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீட் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனா–திபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள் விஜயமாக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யானுடன் இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்ட தன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் பல துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிந்தது.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காகத் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி, சுற்றுலா, நிதி மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உலகளாவிய முன்னணி நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரிகள் பலருடனும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது கலந்துரையாடினார்.

ஜனாதிபதியின் மூன்று நாள் விஜயத்துடன் இணைந்ததாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிதி அமைச்சுக்கும் இலங்கைக்கும் இடையில் முதலீட்டு பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் இந்தச் சுற்றுப்பயணத்தில் இணைந்து கொண்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசுக் கட்சியின்...

எனினும், வழக்கின் எதிராளிகளான சிறீதரன் எம்.பி., குகதாசன் எம்.பி. மற்றும் முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆகியோர் சார்பில் வழக்கை முடிவுறுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து இன்றைய விசாரணையில் கடும் விவாதங்கள் இடம் பெற்றன.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சியின் மத்திய குழுவில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு, அது பற்றித் தாம் ஒரு எதிராளி என்ற முறையில் நீதி மன்றத்திற்கு விவரமாக விடயங்களைச் சமர்ப்பித்து இருக்கையில், மேற்படி மூன்று எதிராளிகளும் கட்சிக்குத் தெரியாமல் – கட்சியை இருட்டில் வைத்துக்கொண்டு – தம்பாட்டில் ஒரு திட்டத்தை, அதுவும் முன்னைய இணக்க ஏற்பாடுகளுக்கு மாறாக முன்வைத்து, இணக்கத்துக்கான வாய்ப்பை வேண்டுமென்றே குழப்பி அடிக்க முயன்றுள்ளனர் என்று எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சுமந்திரன் தமது தரப்பில் தாமே முன்னிலையானார். கட்சியின் செயலாளர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் மற்றும் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி சயந்தன் முன்னிலையானார்.

கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் இரத்தினவடிவில் சார்பிலும் சட்டத்தரணி ஒருவர் முன்னிலையானார்.

சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம், இரத்தினவடிவேல் ஆகிய எதிராளிகள் கட்சியின் மத்திய குழுத் தீர்மானபடி 156 உறுப்பினர்களுடன் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான இணக்கத் திட்டத்துக்குத் தாங்கள் சம்மதிக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர்.

அதேசமயம் சிறீதரன், குகதாசன், யோகேஸ்வரன் ஆகியோர் 324 உறுப்பினர்களுடன் கட்சியின் மத்திய குழுவை கூட்டும் திட்டத்தை வலியுறுத்தினர்.

இதையே ஆரம்பத்தில் எதிராளியான சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்று அவர்கள் மூவர் சார்பிலும் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் தெரிவித்தார்.

வழக்கின் எதிராளிகளுக்கு இடையே கருத்து முரண்பாடு இருப்பதை விசனத்துடன் சுட்டிக்காட்டிய வழக்காளி தரப்பு சட்டத்தரணி, இக்காரணத்தால் இணக்கமான தீர்வு காண்பதற்கான வாய்ப்புகள் அருகி உள்ளன என்றும், வழக்கு விசாரணை நடத்தியே முடிவு காண வேண்டும் எனவும் சுட்டி காட்டினார். இச்சமயத்தில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் எதிராளிகளில் ஒருவரான கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அப்பதவியிலும் இல்லை, அவர் உயிரோடும் இல்லை என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதனால், அந்த இடத்துக்குப் பதில் தலைவரின் பெயரை வழக்கில் எதிராளியாகச் சேர்ப்பதா என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காக வழக்கு ஜூன் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்தத் திகதியில் கட்சியின் பதில் தலைவர் எனக் கருதப்படுபவர் வழக்காளியாகச் சேர்க்கப்பட வேண்டுமா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்தது.

அந்த விடயம் தீர்மானிக்கப்பட்ட பின்னரே வழக்கை விசாரிப்பது குறித்த முடிவை நீதிமன்றம் எடுக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அதனால் இந்த வழக்கு விசாரணைக்கு வர நீண்ட காலம் செல்லும் என்று சட்ட வட்டாரங்கள் குறிப்பிட்டன.

### அகிலன்...

இந்த விடயத்துக்காக வழக்கின் எதிராளியாகச் சுட்டப்பட்டுள்ள அகிலன் முத்துக்குமாரசாமி இன்று நீதிமன்ற விசாரணைக்கு சமுகம் தரவில்லை. எனினும், அவர் சார்பில் சட்டத்தரணி பிரசன்னமாகி இருந்தார்.

வழக்குத் தவணைக்கு அகிலன் முத்துக்குமாரசாமி வருகை தராத நிலையில் அவருக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கச் சட்டத்தரணி சுமந்திரன் கோரினார்.

எனினும், அவர் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும், அவர் பயணம் செய்ய உகந்த நிலையில் இல்லை என்று தெரிவிக்கும் மருத்துவச் சான்றிதழை அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் அவருக்கு இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாக இல்லாமல் இருக்க அனுமதிப்பது என நீதிமன்றம் முடிவு செய்தது.

## பல தரப்பினரும் கலந்துகொண்டு

# சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதிக்கு இறுதி அஞ்சலி

**(எஸ்.நிதர்ஷன்)**

சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் இறுதி அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது.

”ஒருவர் எவ்வாறு வாழ்ந்தார் என்பதன் அர்த்தத்தை அவரது இறுதி நிகழ்வில் தெரியும். அதற்கு எடுத்துக்காட்டாகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதியின் இழப்பு சுட்டி நிற்கின்றது.” – என்று அவரை ஊடகப் புலத்துடன் அரசியல் புலமும் நினைவுகூர்ந்து அஞ்சலித்தது.

உடல் நலத்தால் பாதிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி கடந்த 9ஆம் திகதிதனது 62ஆவது வயதில் காலமானார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று யாழ். திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், சமூகச் செயற்பட்டாளர்கள் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பாரதிக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன் அஞ்சலி உரைகளும் வழங்கினர்.

பாரதியின் அழிக்கப்பட முடியாத வரலாற்றுத் தடங்களை நினைவு கூர்ந்து தமது உணர்வுகளைப் பலரும் அஞ்சலி உரையினூடாக வெளிப்படுத்தினர்.

இறுதிக்கிரியைகளின் பின்னர் அவரது புகழுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.












# சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதிக்கு இறுதி அஞ்சலி














### லசந்த கொலை வழக்கு:

# 3 சந்தேகநபர்களை விடுவிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும்

## நீதிமன்றத்துக்குச் சட்டமா அதிபர் அறிவிப்பு



பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பான வழக்கில் மூன்று சந்தேக நபர்களை விடுவிப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சட்டமா அதிபர் கல்கிசை நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை வழக்கில் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக இனி சட்ட நடவடிக்கை தேவையில்லை என்றும், எனவே அவர்களை விடுவிக்க முடியும் என்றும் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்தார்.

அவர்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட முன்னாள் இராணுவச் சிப்பாய் பிரேம் ஆனந்த உதலாகம, கல்கிசை பொலிஸின் குற்றப் பிரிவின் அப்போதைய பொறுப்பதிகாரி திஸ்ஸசிறி சுகதபால மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன நாணயக்கார ஆகியோர் அடங்குவர்.

கடந்த சில நாட்களாகச் சட்டமா அதிபரின் அந்தக் கடிதம் தொடர்பாக பல்வேறு விவாதங்கள் எழுந்தன.

அதனால் புதிய சாட்சியங்களை வெளிப்படுத்துவதன் அடிப்படையில் குற்றவியல் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதைப் பரிசீலிப்பதற்கு எந்தவித தடையும் இல்லை என்று சட்டமா அதிபர் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.



# மஹிந்தவின் விஜேராம இல்லத்தில் நீர் வெட்டு!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு – விஜேராமவில் உள்ள உத்தியோக பூர்வ இல்லத்துக்குப் பின்னால் பாதுகாப்புப் படையினர் தங்கியிருந்த வீட்டில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 இலட்சம் ரூபா நீர் கட்டணத்தைச் செலுத்தாதன் காரணமாக அந்த வீட்டுக்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு காவலர்கள் தங்கியுள்ள வீட்டுக்கான நீர் கட்டணம் ஜனாதிபதி செயலகம் மூலமாக செலுத்தப்படுகின்றது என்றும் சட்டத்தரணி மனோஜ் கமகே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட நீர் கட்டணங்கள் சில மாதங்களுக்கு முன்பு செலுத்தப்பட்டவை என்று கூறிய முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர், அந்த நேரத்தில் அந்த வீட்டில் 160 பாதுகாப்புக் காவலர்கள் இருந்தமையால், இவ்வளவு நீர் கட்டணத்தைப் பெறுவது நியாயமானது என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள பகுதிக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதானியின் விலகல்

ஆசிய பிராந்திய நாடுகளான இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ராஜதந்திரப் போட்டிக்கான களமாக இலங்கை மாறியுள்ள சூழலில், இரண்டு நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளும் கொழும்பின் தந்திரோபாயம் எவ்வளவு காலத்துக்குத் தொடர்ந்து வெற்றிகரமாகத் தாக்கு பிடிக்கும் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டும் விலாங்கு மீன் தந்திரோபாயத்தை இந்தியா மற்றும் சீனாவுடனான ராஜதந்திரத் தொடர்பாடல்களில் இலங்கை கையாண்டு வந்தது.

கம்பியில் நடப்பது போன்ற இந்த ராஜதந்திரம் சறுக்காமல் - காலை வாராமல் - நீண்ட காலம் தாக்குப் பிடிக்குமா என்ற கேள்வி இல்லாமல் இல்லை.

இப்போது புதுடில்லியின் செல்லப்பிள்ளைகளான அதானி குழுமம் கொழும்புடன் முரண்பட்டுக் கொள்ளும் சூழல் உருவாகி இருக்கிறது. இது இரண்டு நாடுகளையும் சம தூரத்தில் வைத்துக் கையாளும் கொழும்பு அரசின் தந்திரத்திற்குப் பெரும் பின்னடைவு என்று கருதப்படுகின்றது.

மன்னாரிலும், பூநகரியிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டமொன்றையும், மின் விநியோகக் கட்டமைப்பொன்றையும் உருவாக்கும் பணியை இந்தியாவின் அதானி குழுமம் முன்னெடுத்து வந்த நிலையில் தற்போது அதிலிருந்து விலகுவதற்கு அக்குழுமம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் திட்டமிடப்பட்ட 1 பில்லியன் டொலர் (நூறு கோடி டொலர் அல்லது சுமார் முப்பதாயிரம் கோடி ரூபா) முதலீட்டுடனான காற்றாலை மின் திட்டத்திலிருந்தே 'அதானி கிரீன் எனர்ஜி' நிறுவனம் விலக முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான பெரும்பாலான அனுமதிகளை அந்த நிறுவனம் பெற்றுள்ள போதிலும், தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்குகள் உள்ளிட்ட பல்வேறு தாமதங்களைக் காரணம் காட்டி, இன்று வரை இந்தத் திட்டத்தை அந்த நிறுவனத்தினால் செயல்படுத்த முடியவில்லை.

இலங்கையில் தற்போது புதிதாகப் பதவியேற்றுள்ள தேசிய மக்கள் சக்தி அரசின் தலைமைத்துவமும் இலங்கையில் அதானி குழுமச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் ஆரோக்கியமான போக்கில் இல்லை என்ற கருத்து அதானி குழுமத்திலும் புதுடில்லியிலும் நிலவுவதாகக் கூறப்படும் பின்னணியிலேயே அதானி நிறுவனத்தின் விலகல் பற்றிய செய்தி வெளியாகியிருக்கின்றது.

'அதானி கிரீன் எனர்ஜி' நிறுவனம் தற்போது இலங்கை முதலீட்டு சபைக்கு இது குறித்து அறிவித்துள்ளது. மேலும் இது ஒரு 'மரியாதையுடனான (கௌரவத்துடனான) விலகல்' என்றும், இலங்கையில் எதிர்கால திட்டங்களுக்கு தங்கள் நிறுவனம் திறந்திருப்பதாகவும் நிறுவனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் அனுமதி மற்றும் தீர்மானங்களில் ஏற்படும் தாமதங்களே அதானி குழுமத்தை விரக்திக்குள்ளாக்கி விலகச் செய்ததற்கான காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் இந்திய குழுக்களுக்கு இடையே இவ்விடயத்தை ஒட்டி பல சுற்று பேச்சுகள் இடம்பெற்ற போதிலும் இறுதி முடிவு தாமதமாவதால், மரியாதையுடன் விலக முடிவு செய்துள்ளதாக அதானி குழுமம் இலங்கை முதலீட்டு சபைக்கு அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அவரது குழுவினரும் அதானி குழுமத் திட்டம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தனர்.

ஆயினும் விடயங்களில் முன்நகர்வு இருக்கவில்லை. விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கக் காலம் இழுபட்டது.

அதானி விவகாரம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருப்பதாகவும், அதன் பிறகு மேலும் முடிவெடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறியிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம் இதுவரை இறுதிப் பதிலை வழங்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் அதானி குழுமத்தின் விலகல் இலங்கை - இந்திய பொருளாதாரத் தொடர்பாடலில் - ஊடாட்டத்தில் - பலத்த தாக்கத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.



# உடப்பு ஆஞ்சநேயர் ஆலயத்தில் பொங்கல்

(க.மகாதேவன்)

உடப்பு பாலத்துக்கு அருகில் களப்பு பகுதியை அண்மித்த இடத்தில் குடிகொண்ட ஆஞ்சநேயர் ஆலயத்தின் வருடாந்த தைப்பொங்கல் நிகழ்வு நேற்று (12) இரவு நடைபெற்றது.

இதில் பக்தர்கள் கலந்து கொண்டு பொங்கலில் ஈடுபட்டனர்.

# மாதம்பை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தத் திருவிழா





(க.மகாதேவன்)

சிலாபம், மாதம்பை கலஹிட்டியாவ அருள்மிகு ஸ்ரீ கலியுகவரத முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் தீர்த்தம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் போது, அடியார்கள் கலந்து கொண்டு, அருகில் உள்ள தீர்த்தக் கேணியில் தீர்த்தத்தில் ஈடுபட்டனர்.

சிறிய கதிர்காமம் என்று அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் முருகனின் அருளை பல இடங்களில் இருந்து வந்த பக்த அடியார்கள் பக்தியுடன் கொண்டாடினர்.

# சிவனொளிபாத மலையில் சட்ட மீறலுடன் செயற்பட்ட கடைகளுக்கு வழக்குத் தாக்கல்

(மஸ்கெலியா )

சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வீதியில் உள்ள கடைகளில் நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து சட்ட மீறல்களுக்காக 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

ஹட்டன் மஸ்கெலியா சிவனொளிபாத மலைக்கு செல்லும் வீதியில் உள்ள கடைகளில் நடத்தப்பட்ட சோதனையின் போது, நுகர்வோர் சட்டங்களை மீறிய 6 கடைகள் சோதனை செய்யப்பட்டு, ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று நுவரெலியா நுகர்வோர் விவகார அதிகாரசபையின் மூத்த புலனாய்வு அதிகாரி அமில ரத்நாயக்க தெரிவித்தார்.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்கு வருகைதரும் மக்களின் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, சிவனொளிபாத மலைக்கு செல்லும் பாதையில் உள்ள கடைகளை நுவரெலியா நுகர்வோர் விவகார ஆணையம் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

அதன்படி, இந்த ஆய்வு நேற்று முன்தினமும் மற்கொள்ளப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விசாரணை நுவரெலியா மூத்த புலனாய்வு அதிகாரி அமில ரத்நாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், புலனாய்வு அதிகாரிகளான எம். முத்து சிவன், டபிள்யூ.உதயங்கர ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டது. இவர்களுடன் எம். எச். ஜி. காமினி, ஐ. என். எம். டி. காண்டவத்தே மற்றும் எஸ்.எம். ரஸ்லான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# அம்பாறையில் பல்வேறு உதவிகளை வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்!

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகளும் ஆலய திருப்பணிக்கு நிதி உதவியும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.


அம்பாறை மாவட்டத்தில் உள்ள உமிரி பிரதேசத்தில் அமைந்துள்ள காயத்திரி அம்மன் ஆலய கட்டட கட்டுமானப் பணிக்காக ஒரு லட்சம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் உள்ள திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒரு தொகுதிக் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோவில் விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக் கு 3 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியவசிய உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கினார்.





Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555




# தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் தலவாக்கலையில்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை மேல் கொத்மலை வர்த்தக நிலையத்தில் நிறுவப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தலவாக்கலை பொது ஒருங்கிணைப்பு அலுவலகம், நுவரெலியா மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான மஞ்சுள சுரவீரராச்சி தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தலவாக்கலை மற்றும் அதனுடன் தொடர்புடைய தோட்ட மக்களின் பிரச்சினைகளை விரைவாக தீர்க்கும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஒருங்கிணைப்பு அலுவலகத் திறப்பு விழாவில் உள்ளூர் செயற்பாட்டாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.





# மரதன் ஓட்டத்தில் வென்ற மாணவனுக்குச் சைக்கிள்

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் இவ்வாண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டியின் முதல் போட்டி நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி இன்று (13) இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் முதலாமிடம் பெற்ற பிர்தௌஸி இல்ல வீரர் ரி.றிஸ்கி அகமட் டுக்குச் சைக்கிள் ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

அதிபர் ஏ.எல்.நசீபா இக்பால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் ஆரம்பமான மரதன் ஓட்டப் போட்டி சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் கொண்டதாக அமைந்திருந்தது.

சுமார் 30 மாணவர்கள் இப்போட்டிக் காக பங்கு பற்றினர். பாடசாலை வளா கத்தில் ஆரம்பமான இப்போட்டி அக் கரைப்பற்று நகர்ப் பகுதியின் பல்வேறு உள்ளக வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் போன்றவற்றின் மூலமாகப் பாடசாலை வரை இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலிடம் பெற்றுக் கொண்ட வீரருக்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற் றுக் குழு உறுப்பினர் எப்.ஏ.குத்தூஸ் மூலம் சைக்கிள் அன்பளிப்புச் செய் யப்பட்டது.

இந்நிகழ்வின் போது பிரதி அதிபர் கள்களான எம்.ஏ.சலாகுதீன், என்.எம். சாலிஹ், பாடசாலை அபிவி ருத்திக் குழுச் செயலாளர் சபூர் ஆதம், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரி யர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் இணைந்து மகஜர்!

(அஸ்லம் எஸ்.மௌலானா, கே. எ. ஹமீட்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்பு தேர்தல் ஆணைக் குழுவானது சகல அரசியல் கட்சி செயலாளர்களையும் சந்திக்க வேண்டும் என்று சில முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித் தார்.

இது தொடர்பான மகஜர் ஒன்று தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்கவிடம் இன்று வியாழக்கிழமை (13) கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி., ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத் தரணி நிசாம் காரியப்பர் எம்.பி., மலையக மக்கள் முன்ன ணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. உள்ளிட்டோர் தேர்தல் செயலகத்துக்குநேரடியாகச் சென்று இந்த மகஜரைக் கையளித்துள்ளனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட தேர்தல் ஆணையாளர், குறித்த கோரிக்கை தொடர்பில் சாதகமாகப் பரிசீலிப்பார் என்று உறுதியளித்துள்ளார் என்றும் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

# சட்டவிரோதமான பொருள்களுடன் கற்பிட்டி தளுவையில் மூவர் கைது!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி தளுவை பகுதியில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட ஆயிரத்து 158 கிலோ கிராம் மற்றும் 60 கிராம் உலர் இஞ்சி, 45 கிலோ கிராம் உலர் கருவாடு போன்றவற்றை கெப் வாகனத்தில் கொண்டு சென்ற 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.



கடல் வழிகள் ஊடாக கடத்தல் உட்பட சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்து தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரைகளை உள்ளடக்கி கடற்படை வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அதன்படி, வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான தம்பபன்னி கடற்படை பிரிவால் கற்பிட்டி தளுவை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் உலர் இஞ்சி, உலர் கருவாடு மற்றும் கெப் வாகனத்துடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நுவரெலியா மாவட்ட செயலாளராக துஷாரி தென்னகோன் நியமனம்!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தின் புதிய மாவட்ட செயலாளராக திருமதி துஷாரி தென்னகோன் நேற்று முன்தினம் (11) பதவியேற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் மற்றும் வேதியியலில் இளங்கலை விஞ்ஞானப் பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்ற திருமதி துஷாரி தென்னகோன், நுவரெலியா மாவட்டச்செயலாளராக வருவதற்கு முன்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராக (நிர்வாகம்) பணியாற்றினார்.

இவர் மாத்தளை மற்றும் ஹரிஸ்பத்துவ உதவி பிராந்திய செயலாளர், மாகாண பிராந்திய செயலாளர், மத்திய மாகாண சுகாதார அமைச்சின் உதவி செயலாளர், விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்), பணிப்பாளர் (நிர்வாகம்) போன்ற பல பதவிகளை வகித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் (நிர்வாகம்) தினிகா கவிசேகர, மேலதிக மாவட்ட செயலாளர் (காணி) ஷாலிகா லிடகும்புர மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கல்முனை நீதிமன்ற வளாகத்தில் சந்தேக நபர் ஒருவர் தப்பியோட்டம்!

(பாறுக் ஷிஹான்)

நீதிமன்றில் வழக்கு நடைபெற்றவேளை தப்பிச் சென்ற சந்தேக நபரை தேடும் பணியில் கல்முனை தலைமையக பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

இன்று (13) குறித்த சந்தேக நபர் அம்பாறை மாவட்டம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக அழைத்து வரப்பட்டு விசாரணையின் பின்னர் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த சந்தேக நபருக்கு பிணையாளி எவரும் வருகை தராமையால் இன்மையால் நீதிமன்ற உள்ளக வளாகத்தில் உள்ள சிறை கூடத்துக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அவ்வேளை குறித்த சந்தேக நபர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்து தப்பி நீதிமன்ற சுவரில் ஏறித் தப்பி சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தப்பிச்சென்ற சந்தேக நபர் சம்மாந்துறைப் பகுதியை சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தடைபட்டிருந்த திருக்கோவில் ஆலயத்தின் இராஜகோபுர பணிகள் மீண்டும் ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலயத்தில் பல வருடங்களாக தடைபட்டிருந்த இராஜகோபுர அமைப்பு திருப்பணி வேலைகள் மீண்டும் நேற்று முன்தினம் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

108 அடி உயரமான 9 தளங்களுடன் கூடிய இராஜகோபுரம் அடித்தளம் இட்டு இதுவரை காலமும் முற்றுப் பெறாத நிலையில் 33 அடி உயரத்தில் காணப்பட்டது.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அடுத்த கட்டத் திருப்பணியை ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான பரிபாலன சபையினர் அண்மையில் கூட்டம் கூடி அடுத்த கட்ட நகர்வை முன்னெடுத்திருந்தனர்.

அதன் முதற் கட்டமாக சமூக செயற்பாட்டாளர், கல்முனை லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் முதலிரு தளங்களை அமைக்க முன்வந்திருந்தார். இந்த நிலையில் அதற்கான திருப்பணி வேலைகளை நேற்று முன்தினம் ஆரம்பித்தார்.





# 50 ஆயிரம் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புகளின்றி அவதி!

## மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் தகவல்

(மட்டு. துஷாரா, அபு அலா )

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை வாய்ப்புகளின்றி 50 ஆயிரம் இளைஞர், யுவதிகள் உள்ளனர் என்றும், இது மாவட்டத்தின் சனத்தொகையில் 7 சதவீதம் எனவும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ரூமேனியா நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக செல்லும் இளைஞர் யுவதிகளுக்கான நேர்முகத் தேர்வு நேற்று (12) மட்டக்களப்பு கிரீன் மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு இவ்வாறு வெளிநாடுகளில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்காக நம்பிக்கையான நிறுவனங்கள் இருப்பதுமகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாறு அதிகமான நிறுவனங்கள் மாவட்டத்துக்கு வருகை தந்து நம்பகத்தனமான முறையில் இளைஞர் யுவதிகளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அனுப்புகின்ற போது எமது மாவட்டத்தில் நிலவுகின்ற வேலை வாய்ப்புப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்தார்.

இலங்கை வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அனுசரணையுடன் அப்ரோன் குழுமத்தால் ரூமேனியா நாட்டுக்கு வேலை வாய்ப்புக்காக இளைஞர் யுவதிகள் அனுப்பப்படவுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ரூமேனியா நாட்டில் இருந்து வருகைதந்த ரூமேனியா நாட்டு பிரதிநிதி திருமதி ரொக்சானா தலைமையில் இடம்பெற்ற இந்த நேர்முகப் பரீட்சையில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்து சுமார் 350 இளைஞர் யுவதிகள் தோற்றியிருந்தனர். இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் 8 மாதகாலத்துக்குள் ரூமேனியாகுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பௌர்ணமிக் கலை விழா!

(மட்டு. துஷாரா, அபு அலா )

மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்திய பௌர்ணமி கலை விழா நேற்று (12) காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நா.தனஞ்செயன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாணம் கல்வி அமைச்சு செயலாளர் கே.குணநாதன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், சுவாமி விவேகானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பனிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கெனடி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நடனம், கிராமிய நடனம், சக்தி தாண்டவம், நாட்டுக்கூத்து, பறங்கியர் இசை பாடல்கள் போன்றன இடம்பெற்றன.

## ஒதியமலையில் மக்கள் குறைகேள் சந்திப்பு

# வனஇலாகா அபகரித்துள்ள வயல் காணிகள்; பயன்பாடின்றி காணப்படும் கருவேப்ப குளம்!

## பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஒதியமலைக் கிராமத்தில் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது வனவளத் திணைக் களத்தால் அபகரிக்கப்பட்டுள்ள, கரு வேப்ப முறிப்புக் குளத்தின் கீழான மக்க ளின் வயல்நிலங்களையும், இவ்வாறு வனவளத் திணைக்களம் வயல் நிலங்களை அபகரித்துள்ளதால் பாரிய நிதிச்செலவில் சீரமைக்கப்பட்டும், பயன் பாடில்லாமல் காணப்படும் கருவேப்ப முறிப்புக் குளத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவரு கையில்,

இந்த மக்கள் குறைகேள் சந்திப்பில் விவசாய வீதிகளைச் சீரமைத்தல், விவசாயக் கிணறுகளைச் சீரமைத்தல், குளங்களின் சீரமைப்பு, வாய்க்கால் சீரமைப்பு, கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகளைப் பெற்றுக்கொடுத்தல், யானைவேலி அமைத்தல், அணைக் கட்டுக்கள் அமைத்தல், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் இதன்போது ஒதியமலைக் கிராம மக்களால் முன் வைக்கப்பட்டன.

அதேவேளை, ஒதியமலைப்ப பகுதி யில் அமைந்துள்ள கருவேப்ப முறிப்புக் குளத்தின் கீழான வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் அபகரிக் கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாரிய நிதிச் செலவில் சீரமைக்கப்பட்ட கருவே வப்பமுறிப்புக்குளம் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது. எனவே குறித்த விவசாயக் காணிகளை விடு



விப்புசெய்துதருமாறும் இதன்போது அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02 ஆம் திகதி ஒதிய மலைக் கிராம மக்கள் பலர் இராணு வத்தினரால் படுகொலை செய்யப்பட்ட னர் என்று அந்தப் பகுதி மக்களால் தெரி விக்கப்படுகிறது. தற்போதும் ஒவ்வொரு ஆண்டும் அவ்வாறு படு கொலை செய்யப்பட்ட கிராம மக்களுக்கு டிசெம்பர் 02 ஆம் திகதியில் அஞ்சலி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த படுகொலைச் சம்பவத்துக்குப் பிற்பாடு அங்கிருந்த தமிழ் மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்ததுடன், நீண்டகாலத்துக்குப் பின்னரே தமது பகுதிகளில் மீளக்குடிய மர்த்தப்பட்டனர்.

இவ்வாறு நீண்டகால இடப்பெயர் வைச் சந்தித்தமையால் அவர்கள் இடம்பெயர்வுக்கு முன் விவசாயம் மேற் கொண்ட காணிகள் அனைத்தும் தற் போது பற்றைக் காடுகளாகக் காட்சி யளிக்கின்றன.

இந் நிலையில் இவ்வாறு பற்றைக் காடுகளாகக் காணப்படும் மக்களின் விவசாயக் காணிகளை வனவளத் திணைக்களம் தமது பகுதிகள் என்று தற்போது அபகரித்துள்ளது.

குறிப்பாகக் கருவேப்பமுறிப்பு குளத்தின் கீழான சுமார் 110 ஏக்கருக்கும் மேற்பட்ட மக்களின் வயல் காணிகள் இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கருவேப்பமுறிப்புக் குளம் கமநல அபிவிருத்தி திணைக் களத்தால் பாரிய நிதிச்செலவில் சீரமைக் கப்பட்டு விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு தயாரான நிலையில் காணப்படுகின்ற போதிலும், குளத்தின் கீழான மக்களின் வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்தால் அபகரிக் கப்பட்டிருப்பதால் மக்கள் தமது விவசாய நிலங்ளைத் துப்பரவு செய்து விவசாயம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற் பட்டுள்ளது.

இந்த நிலையில் அப்பகுதி மக்களின் முறையீட்டுக்கு அமைய கருவேப்ப முறிப்புக் குளத்தையும், வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ள அக்குளத்தின் கீழான வயல் நிலங்களையும் வன்னிமாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வை யிட்டிருந்தார்.

மேலும் இதன்போது மக்களிடம் மகஜர்களையும் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் , மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக் கைகள் குறித்து தம்மால் கவனம் செலுத் தப்படும் எனவும் தெரிவித்தார்.

# பிரபலங்கள் இணையாததால் விரக்தியில் இருக்கிறார் விஜய்



தமிழக வெற்றிக் கழகத்தை விஜய் தொடங்கி ஒருவருடம் கடந்துவிட்ட நிலையில், அந்தக் கட்சிக்கு போதுமான வரவேற்பு இல்லை என்கின்றன விஜய்க்கு எதிரான கட்சிகள். ஆனால் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், தனது அடுத்த கட்ட நகர்வு குறித்து பிரசாந்த் கிஷோரை கூட்டி வைத்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார் விஜய்.

பொதுவாக புதிதாக தொடங்கப்படும் கட்சிகளில் மாற்றுக் கட்சி நிர்வாகிகள், பிரபலங்கள், நடிகர்கள் தாமாக வந்து இணைவது வழக்கம். விஜயகாந்த் கட்சி தொடங்கியபோது அப்படி பலர் இணைந்தனர். கமல் கட்சி தொடங்கியபோதும்கூட பல முன்னாள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள், நடிகர்கள், தொழிலதிபர்கள், பிரபலங்கள் அவரது மக்கள் நீதி மய்யத்தில் கலந்தனர்.

த.வெ.க. உதயமாகி ஒரு வருடம் ஆன பிறகும் அந்தக் கட்சியில் பெரிய அளவில் பிரபலங்கள் இணையவில்லை. இதனால்தான் ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், ராஜ்மோகன் ஆகியோர் தங்கள் பக்கம் வந்ததையே பெரும் கொண்டாட்டமாக்கினர் த.வெ.க.வினர்.

விஜய் அரசியலுக்கு வருகிறார் என்றதுமே அவரது கட்சியில் இணைய பலரும் தயாராகவே இருந்தனர். ஆனால், கட்சியின் செயல் திட்டங்கள், கொள்கைகளை விஜய் அறிவித்த பிறகு அத்தனை பேரும் அமைதியாகி விட்டனர். முன்னுக்குப் பின்னான கொள்கை முழக்கங்கள், கள அரசியலில் விஜய் இறங்காதது, புஸ்ஸி ஆனந்தின் ஆதிக்கம், கட்சியின் ஆமை வேக நகர்வுகள் இதெல்லாம்தான் அந்த அமைதிக்குக் காரணம்.

கட்சியை அறிவித்த கையோடு மாநாடு நடத்தி, நிர்வாகிகளை நியமித்து, விஜய் தடாலடியாக கள அரசியலில் இறங்கியிருந்தால் கட்சி சுறுசுறுப்பாக இருந்திருக்கும். ஆனால், கட்சி தொடங்கி ஓராண்டு கழித்துத்தான் மாவட்டச் செயலாளர்களையே நியமிக்கிறார் விஜய். அப்படியானால் எந்த நம்பிக்கையில் பிரபலங்கள் இவரோடு இணைவார்கள் என்ற கேள்வியையும் விமர்சகர்கள் எழுப்புகிறார்கள்.

இன்னொரு பக்கம், திராவிடம், தமிழ்த் தேசியம், தலித்தியம், மார்க்சியம் என அனைத்தையும் கலந்து கட்டி அடிப்பதால், விஜய் என்ன மாதிரியான அரசியலை முன்னெடுப்பார் என்ற கேள்வி அனைவர் மனதிலும் உள்ளது. விஜய் கட்சியில் ஏன் பிரபலங்கள் இணையவில்லை என்பதற்கான பதிலும் இதுதான் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். புதிய கட்சிகள் தோன்றும்போது உடனடியாக கிளைகள் அளவில் கொடிகள் பறக்கத் தொடங்கும். ஆனால், அதுவும் த.வெ.க-வுக்கு பெரிய அளவில் சாத்தியமாகவில்லை.

த.வெ.க-வில் பிரபலங்கள் இணையாததால் விஜய் விரக்தியில் இருக்கிறாரா என்று அக்கட்சியின் கொள்கைபரப்பு இணைச் செயலாளர் லயோலா மணியிடம் கேள்வி எழுப்பியபோது,

“கடந்த ஆண்டு பெப்ரவரியில் கட்சியை அறிவித்த போதே, ஒரு படத்தை முடித்துவிட்டு நேரடியாக அரசியல் களத்துக்கு வருவதாக சொல்லியிருந்தார் தலைவர்.

இடைப்பட்ட காலத்தில் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்தி, 95 மாவட்டச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகளை நியமித்துள்ளார். கட்சியின் உறுப்பினர் சேர்க்கை 80 லட்சத்தை கடந்துவிட்டது. 2026 தேர்தலில் தி.மு.கவுக்கு மாற்றாக த.வெ.கவை மக்கள் நினைப்பதாலேயே இது சாத்தியமாகியுள்ளது. இந்த மிகப்பெரிய வரவேற்பால் தலைவர் மிக உற்சாகமாகவே இருக்கிறார்.

த.வெ.கவில் தங்களை இணைத்துக்கொள்ள ஆளும் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த பிரபலங்கள் பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர். த.வெ.க. நிர்வாகிகள் நியமனத்துக்கு பின்னர் தமிழகத்தில் காட்சிகள் மாறும், பல முக்கிய தலைவர்கள் எங்கள் கட்சியில் இணைவதைப் பார்ப்பீர்கள்.” என்றார்.

# விரைவில் மாநிலங்களவை எம்.பியாகிறார் கமல்ஹாசன்



ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று திடீரென சந்தித்துப் பேசினார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரான நடிகர் கமல்ஹாசன் கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்டு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

அதன்பிறகு கடந்த மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இணைந்தார். தி.மு.க. கூட்டணி சார்பில் மக்களவை தேர்தலில் கமல்ஹாசன் போட்டியிடுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் போட்டியிடவில்லை. அவர் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்தார்.

கூட்டணியின்போது அவருக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்கப்படும் என உடன்பாடு செய்யப்பட்டது. மக்களவை தேர்தலில் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றிபெற்று 39 இடங்களையும் கைப்பற்றியது. தேர்தலுக்கு பிறகு கமல்ஹாசன் தீவிர அரசியலில் ஆர்வம் காட்டவில்லை. ஏதேனும் பொது பிரச்சினைகள் என்றால் அதுதொடர்பாக கருத்து தெரிவிப்பதோடு சரி. பெரிய அளவில் கட்சி பணிகளில் அவர் ஈடுபடுவது இல்லை.

இந்நிலையில், ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனை சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது அலுவலகத்தில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று காலை சந்தித்துப் பேசினார். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று ம.நீ.ம. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மநீம வெளியிட்ட செய்திக்குறிப்பில், “தமிழக இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனை அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இச்சந்திப்பின்போது கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் உடனிருந்தார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனுடான திடீர் சந்திப்பு குறித்து அமைச்சர் சேகர்பாபுவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, “தேர்தல் தொடர்பான சந்திப்பா? என்று கேட்கிறீர்கள். சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 14 மாதங்கள் இருக்கின்றன” என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு வடசென்னை தொடர்பான வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்க தொடங்கினார்.

கமல்ஹாசனை சந்தித்தது குறித்து அவர் வேறு எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே, தி,மு,க, கூட்டணியில் உள்ள ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசனை, அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று திடீரென்று சந்தித்து பேசியது குறித்து அரசியல் வட்டாரத்தில் புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன. விரைவில் தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் உதவியுடன் கமல்ஹாசன் மாநிலங்களவை எம்.பியாக தேர்வுசெய்யப்பட இருப்பதாக அத்தகவல்கள் கூறுகின்றன.






# பங்களாதேஷ் போராட்டம்; 1,400 பேர் உயிரிழப்பு!

பங்களாதேஷ் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களின் போது 1,400 பேர் இறந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

இந்தக் இறப்புக்கள் பல பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்டவை என்று சுட்டிக்காட்டும் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள், பதவி நீக்கம் செய்யப்பட்ட சேக் ஹசீனா அரசாங்கம் நாட்டின் மக்களுக்கு எதிரான குற்றங்களைச் செய்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கிடையில், பங்களாதேஷில் இடைக்கால அரசின் தலைவராக பணியாற்றி வரும் முகமது யூனுஸ், தலைநகர் டாக்காவில் உள்ள ஹசீனா நிர்வாகத்தின் பல சித்திரவதைக் கூடங்கள் மற்றும் இரகசிய சிறைச்சாலைகளுக்கு சென்று பார்வையிட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# புடினை சவுதி அரேபியாவில் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளது

### டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு


ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சவுதி அரேபியாவில் தாம் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியுடனான தொலைபேசி கலந்துரையாடலை அடுத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு ரஷ்ய ஜனாதிபதி இதன்போது ஒப்புக் கொண்டுள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேநேரம், இரு நாட்டுத் தலைவர்களும் தங்களது நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பரஸ்பரம் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதிக்கும் ரஷ்ய ஜனாதிபதிக்கும் இடையே சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# காஸா வைத்தியர்களை இஸ்ரேல் சிறைபிடித்து துன்புறுத்துவதாகச் சட்டத்தரணிகள் குற்றச்சாட்டு

காசாவில் முதலுதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்த வைத்தியர்களை பணயக்கைதிகளாக இஸ்ரேல் சிறைபிடித்துள்ளதுடன், அவர்களை தங்கள் நிலைகளில் வைத்துத் துன்புறுத்துவதாக காஸா சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவத்தினரால் சிறைபிடிக்கப்பட்ட வைத்தியர்களைச் சந்தித்தப் பின்னர் அவர்களின் சட்டத்தரணிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேல் இராணுவத்தால் தன்னிச்சையாகத் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த வடக்கு காஸாவின் கமல் அத்வான் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் உடல் ரீதியாகத் துன்புறுத்தல்களை அனுபவித்துள்ளார் என தமது சட்டத்தரணியிடம் குறிப்பிட்டுள்ளார்.

அல்மெய்சான் மனித உரிமைகள் மையத்தின் உதவியுடன் சிறைபிடிக்கப்பட்ட அந்த வைத்தியர் முதல்முறையாக தமது சட்டத்தரணியை மாத்திரம் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்த சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு
வியாழக்கிழமை 13/02/2025

## தென் ஒன்றாரியோ பகுதியில் கடும் பனிப்பொழிவு ஏற்படும்

ஒன்றாரியோ மாகாணத்தில் காலநிலை தொடர்பில் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தென் ஒன்றாரியோ பகுதியில் கடுமையான பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வுகூறப்பட் 02▶



# ரொறன்ரோவிலும் பாரிய பனிப்பொழிவு

கனடாவின் ரொறன்ரோவில் பாரிய பனிப்பொழிவு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மாலை வேளையில் சுமார் 25 சென்றி மீற்றர் அளவில் பனிப்பொழிவு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்புயல் மற்றும் பனிப்பொழிவு காரணமாக மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதைகள், சுரங்கப் பாதைகள் வழுக்கும் தன்மையுடன் கூடியதாக இருக்கும் எனவும் பயணங்களை மேற்கொள்வது சிரமமாகக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறவை காய்ச்சல் குறித்து கனடாவில் எச்சரிக்கை

கனடாவில் பறவை காய்ச்சல் நோய் தொடர்பில் எச்சரிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கனடிய பறவைகளுக்கு பறவை காய்ச்சல் நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விடயம் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சில தேசிய பூங்காக்களில் பறவை காய்ச்சல் பாதிக்கப்பட்ட பறவைகள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ரக் பூங்காவில் சடலமாக மீட்கப்பட்ட பறவை ஒன்றை பரிசோதனை செய்தபோது அந்தப் பறவைக்கு பறவை காய்ச்சல் தொற்று ஏற்பட்டு இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் 5 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்பு

கனடாவில் சுமார் ஐந்து கிலோ கிராம் எடையுடைய போதைப்பொருள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதை பொருள்களுடன் பயணம் செய்த இரண்டு பேரை டர்ஹம் பிராந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் ஐந்து கிலோ கிராம் எடையுடைய கிரிஸ்டல் மெத் எனப்படுகின்ற போதைப் பொருள் சந்தேகநபர்களிடம் இருந்து மீட்கப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் மேற்கொண்ட சோதனைகளின் போது இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்துவோரை தடுத்து நிறுத்தும் நோக்கில் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இந்த கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

31 வயதான டெரன் சிமென்ஸ் மற்றும் 34 வயதான அடம் பெர்சுட் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.







## தென்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ளது.கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த விடயம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று கடுமையான பனிப்பொழிவு மற்றும் பனிப்புயல் நிலைமைகளை அவதானிக்க முடியும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை சில பகுதிகளில் 40 சென்றி மீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வார இறுதி நாள்களில் ரொறன்ரோ மற்றும் ரொறன்ரோ பெரும்பாக பகுதிகளில் பனிப்புயல் வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் கத்தி குத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது

கனடா ரொறன்ரோவில் கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரொறன்ரோவின் வெஸ்ட் டொன் லேன்ட்ஸ் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு ஆண்கள் மோதிக்கொள்வதாக கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சுமார் 20 வயது மதிக்கத் தக்க நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்தினால் பொதுமக்களுக்கு பாதிப்பு எதுவும் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான ஒலிவ் எண்ணெய் திருட்டு

கனடாவில் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான ஒலிவ் எண்ணெய் களவாடப்பட்டுள்ளது.

கனடாவின் போக்குவரத்து நிறுவனங்கள் இரண்டிலிருந்து சுமார் ஒரு மில்லியன் டொலர் பெறுமதியான ஒலிவ் எண்ணெய் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மொன்றியல் பொலிஸார் இந்த சம்பவம் குறித்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

க்யூ டிரான்ஸ் என்ற போக்குவரத்து நிறுவனம் வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒலிவ் எண்ணெய் விநியோகம் செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இந்த வாடிக்கையாளருக்கு ஒலிவ் எண்ணெய் விநியோகம் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதே போன்று மற்றுமொரு போக்குவரத்து நிறுவனமும் ஒலிவ் எண்ணெய் விநியோகம் செய்வதாக உறுதி அளித்த போதிலும் ஒலிவ் எண்ணெய் வினியோகம் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒலிவ் எண்ணெய் வகைகள் களவாடப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.